எலஹர பிரதேச சபை - 2023

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எலஹர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான எலஹர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,

- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதாக ரூபா774,950 செலவு அட்டுறு செலவின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை | பின்னர் சீராக்கம் செய்யப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்துக்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் இனங்கண்டு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | பகமூன வார சந்தை மற்றும் தியபெதும கற்றல் நிலையம் தொடர்பாக முன்பு பெற்ற வருமானம் ரூபா33,800 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | முந்திய ஆண்டுடன் தொடர்புடைய தகனச்சாலை வருமானம் ரூபா 10,000 மற்றும் அடுத்த ஆண்டு தொடர்பான கேட்போர்கூட வாடகை வருமானம் ரூபா5,000 மீளாய்வாண்டின் வருமானங்களாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தன. | சரியான தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கிய பெறுமதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆவணங்களின்படி, 04 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பான பெறுமதிகளுக்கு இடையே ரூபா148,551 வேறுபாடு இருந்தது. | எதிர்காலத்தில் இந்நிலமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது . | பயன்பாட்டு ஆவணங்களுடன் ஒப்பிட்டு சரியான பெறுமதிகளை இனங்காணுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கிய பெறுமதிகளுக்கும், நிதிக்கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்ட அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பான பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 5,862,052 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் இந்நிலமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அட்டவணைகளில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டும் பெறுமதிகள் இணங்குதல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கைத்தொழில் கடன்படுநர் | 6,781,811 | கடன்படுநர்/ கடன்கொடுநர் அட்டவணை | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என | உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| கைத்தொழில் கடன்கொடுநர் | 8,278,872 | மீதிகளை உறுதிப்படுத்தல் | | |
| வருமதி குப்பைக் கட்டணம் | 561,500 | நாளதுவரையாக்கிய குப்பை வரி ஆவணம் | நாளதுவரையாக்கிய ஆவணம் தயாரிக்கப்படுமென | உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| குப்பைக் கட்டண வருமானம் | 71,400 | அட்டவணை | | |
| நிலுவை சம்பள மீள்நிரப்பல் | 214,200 | அட்டவணை | முன்வைப்பதற்கு தவறியது என | உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| வருமதி வாகன வாடகை | 1,052,242 | நாளதுவரையாக்கிய வருமான ஆவண | சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது . | உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| வருமானம் (முன் நிலுவை) | | அட்டவணை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| தேய்மானம் | 76,838,937 | திரண்ட தேய்மான அட்டவணை<br><br>நிலையான சொத்து ஏடுகளில் திரண்ட தேய்மானம் சேர்க்கப்படவில்லை | நிதிக்கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள தென. | உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| | -------------- | | | |
| | 93,798,962 | | | |
| | ======== | | | |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) | விதிகள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | | |
| | 2020 யூலை03 திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் அடங்கிய விதி இல.61 | முற்பணத்தை விடுவிப்பது தொடர்பான மதிப்பீட்டைத் தயாரிப்பதன்மூலம் மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2023ஆம் ஆண்டு பொருட்டு மதிப்பீட்டைச் சமர்ப்பிக்காமல் 95 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 2,174,065 வழங்கப்பட்டது. | தற்போது மதிப்பீடு முன்வைக்கப்படும் என | வவுச்சருடன் மதிப்பீடு முன்வைத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நி.பி. 755 (1) மற்றும் (2) | பொருட்கள் மற்றும் பிற அரச சொத்துக்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அலுவலரொருவர் தனது கடமைகளை கைவிடுவதற்கு முன், அத்தகைய கடமை அவரால் ஒப்படைக்கப்படவுள்ள அலுவலர் | தற்போது பொருட்கள் மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பாகவிருக்கும் விடய அலுவலரிடம் பொருட்கள் மற்றும் சொத்துக்கள் | சட்டரீதியாக செயலாற்ற வேண்டும். |

| | |
|---|---|
| எவருக்கும் தம் பொறுப்பிலுள்ள் அனைத்து அரச பொருட்கள் மற்றும் சொத்துக்களை ஒப்படைத்து, அவை கிடைத்தன என ஒப்படைக்கப்பட்ட அலுவலரிடமிருந்து இரு பிரதிகளுடன் பற்றுச்சீட்டொன்றை பெற வேண்டிய போதிலும், அவ்வாறு செயலாற்றியிருக்கவில்லை. | ஒப்படைக்கப்படவில்லை என்றும், களஞ்சியத்தை கையேற்கும்போது இருப்புக்கள் கணக்கிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் தற்போது குறித்துரைக்கப்பட்ட முறையியலின்படி களஞ்சிய வேலைகள் இடம்பெறுகின்றன என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிஞ்சிய வருமானம் ரூபா 9,519,834ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 5,172,484ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,716,269 | 340674 | 263,740 | 1,133,993 | 1,781,498 | 803,982 | 511,575 | 1,057,059 |
| வாடகை | 34,495,000 | 2,566,250 | 3,176,820 | 2,164,775 | 34,495,000 | 2,399,312 | 4,726,278 | 2,775,345 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 885,000 | 1,716,790 | 752,590 | 1,430,220 | 745,250 | 1,470,140 | 1,228,610 | 466,020 |
| ஏனைய வருமானங்கள் | 17,383,816 | 5,884,390 | 5,446,801 | 1,219,529 | 8,239,936 | 3,195,130 | 3,667,776 | 781,941 |
| மொத்தம் | 55,480,085 | 10,508,103 | 9,639,951 | 5,948,517 | 45,261,684 | 7,868,564 | 10,134,239 | 5,080,365 |

## 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில், அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரித் தொகை ரூபா 572,492 ஆக இருந்ததுடன், நிலுவை வருமானம் தொடர்பாக பிரதேச சபைச் சட்டத்தின் 158ஆம் பிரிவின்படி செயலாற்றியிருக்கவில்லை. | நிலுவை வீதவரியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | உரிய வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வாகன வாடகை வருமானம் ரூபா 37,270,344 ஆன போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,176,822 அதாவது சேகரிக்கப்பட வேண்டிய வருவாயில் 08 வீதம் மட்டுமே ஆகும். | நிலுவை வாகன வாடகை வருமானம் காரணமாக சேகரிக்கப்பட்ட வாடகை வருமானம் குறைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாகன வாடகை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | எலஹர பிரதேச சபையின் 35 கடைஅறைகளுக்குரிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா880,767 நிலுவை வருமானம் உள்ளதுடன், இந்த நிலுவையானது 05 மாதங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடையதுடன் நிலுவையை அறவிட்டுக்கொள்வதற்கு ஒப்பந்தம் பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை. | நிலுவையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிடுதல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டின்டில், அறவிட்டுக் கொள்வதற்கு செயலாற்றாத வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 139,000 ஆக இருந்தது. | நிலுவையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை நாளதுவரையாக்கி அறவிடுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| (i) | சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 08 செயற்பாடுகள் வரை இருந்த போதிலும், மீளாய்வாண்டில் 02 செயற்பாடுகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | சபையிலுள்ள நிதிய அளவின்படி இந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றுகை இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மனித வள அபிவிருத்திக்காக 15 செயலமர்வுகளை சபை திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் 03 செயலமர்வுகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படடிருந்தன. | சபையிலுள்ள நிதிய அளவின்படி இந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றுகை இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **<u>செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்</u>**<br>உள்ளூராட்சி நிறுவனங்களைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த வருடங்களில் 04 பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக ரூபா24,922,968 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தத் திட்டங்கள் மீளாய்வாண்டு தசெம்பர் 31ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் அமைச்சினால் இரத்துச்செய்யப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றுகை இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எலஹர பிரதேச சபை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா211,280 ஐ மேலதிக தொகையாக செலுத்தியிருந்ததுடன், இது தொடர்பில் பொறுப்பான தரப்பினர்களை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மேலதிக தொகையானது உதவுத் தொகை செலுத்தப்படாத காலத்திற்காக கணக்கிடப்பட்ட மேலதிக தொகை என. | பொறுப்பான தரப்பினர்களை இனங்கண்டு அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | தியபெதும தெஹிவத்தையில் உள்ள கடைஅறைகள் தொடர்பான ஒப்பந்தங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு பொறுப்பான அதிகாரிகள் தவறியதோடு, இந்தக் கடைஅறைகள் தொடர்பான நிலுவைத் தொகையான ரூபா 447,025 அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியவாறு இயைபான பணிகளை பூர்த்திசெய்யுமாறு விடய அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கும், ஒப்பந்தங்களை புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான பேக்ஹோ லோடர் பொறி பழுதுபார்ப்பதற்காக பொறியாளரிடம் 2022 பெப்ரவரி 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால், 2023 நவம்பர் மாதமளவில் உரிய பழுதுபார்த்தல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பழுதுபார்க்கும் செலவு ரூபா880,000 இருந்து ரூபா1,408,100 வரை அதிகரித்திருந்தது. இதன் காரணமாக ஈட்டக்கூடிய வருமானமும் இழக்கப்பட்டுள்ளதுடன், பொறியைப் பயன்படுத்தும் வாய்ப்பும் இல்லாமல் போனது. | பழுதுபார்ப்பதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்தவுடன் இந்த பழுதுபார்த்தல் பணி விரைவில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | தாமதமின்றி பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | எலஹர பிரதேச சபைக்குச் சொந்தமான காணிகளில மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற 02 கடைஅறைகளை நிர்மாணிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்ட போதிலும, அது தொடர்பான வாடகை மதிப்பீடு மற்றும் ஒப்பந்த காலம் தீர்மானிக்கப்படாததுடன் வாடகை செலுத்தாமை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பிரச்சினை தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்திடம் அறிவுரை கோரப்பட்டுள்ளது என. | சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமிய இலத்திரனியல் நூலகத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நூலகக் கட்டடத்தின் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், தேவையான மனித வளங்கள் இல்லாமையினால் இந்த நூலகக் கட்டடம் பயன்பெறாது உள்ளது என அவதானிக்கப்பட்டது. | போதியளவு பணியாளர்கள் இல்லையெனவும், உள்ளகப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் அதிக விடயங்களுடன் மிகவும் கடினமான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 முதல் 2017 வரையிலான காலப்பகுதியினுள், நீண்ட தூர பேருந்து நிலையம் மற்றும் வர்த்தகதொகுதியொன்றை அமைக்கும் செயற்றிட்டத்தை செயல்படுத்துவதற்கான சபை அனுமதியும் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வும் இன்றி கருங்கல்லை இடித்து அகற்றுவதற்கு முறையான நிதி நடைமுறைகளைப் பின்பற்றாமல் செலுத்தப்பட்ட ரூபா15,675,708 தொகை பயனற்ற செலவாக இருந்ததுடன், எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் முடியாமல் இருந்தது. | இது தொடர்பில் ஆரம்ப விசாரணை நடைபெறுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது | சபையயின் அங்கீகாரம் இல்லாமல் பணிபுரிந்ததால் ஏற்பட்ட நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபைக்குச் சொந்தமான டபள் கெப் வண்டி பயன்பெறாது இருந்தது. | கெப் வண்டியை கைமாற்றிக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனத்தை கையுதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 252-6453 இலக்கம் கொண்ட கெப் வண்டி 202212 ஒக்டோபர் 12 முதல் 2022 ஒக்டோபர் 24 வரை சட்டயின் தலைவருடன் 07 சந்தர்ப்பங்களில் (நாட்கள்) 1456 கி.மீ. பயணம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டாலும், தொடர்புடைய ஓட்டக் குறிப்பேட்டில் தலைவர் கையொப்பங்களை இட்டு உறுதிப்படுத்தவில்லை. | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனம் பழுதுபார்க்கும் காலத்தில் இந்த வாகனம் பயன்படுத்தப்பட்டது என்பதனை உறுதிப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஓட்டக் குறிப்பேட்டில் உரிய கையொப்பங்களை பெறுதல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி வடமத்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு கையளிக்கப்பட்ட 02 உழவு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவிலேனும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்யப்படாத வாகனங்களை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கையேற்பதற்குரிய எழுத்து மூலம் கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று, பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களில் 20 வெற்றிடங்களை முறையான விதத்தில் நிரப்புவதற்கு பொறுப்புள்ள அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாண்டு பதவியினர் அறிக்கைகள் மூலம் உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் பெறுமதி ரூபா1,301,181 தொடர்பான 13 கடன் கோப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை, என்பதுடன் செலுத்திய ரூபா719,584 தொகை தொடர்பான கடன் ஒப்பந்தம் (பொது 272 படிவம்) மற்றும் பொது158 படிவம் என்பன பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கோப்புகள் அனைத்தையும் இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு, விடய அலுவலருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கோப்புகள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| வட மத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 திகதியிட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 4/2015 இன் 1.3 பிரகாரம், உள்ளக கணக்காய்வு அலுவலா ஒருவரை நியமித்து ஒவ்வொரு மாத இறுதியிலும் பொதுச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், உரிய அலுவலருக்கு பிற பணிகளும் ஒதுக்கப்பட்டடிருந்தமையினால், போதுமான அளவு உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு பொருட்டு உகந்த ஆள் நிறுவனத்தில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| NCP/LG/ACC02/01 மற்றும் 2023 சனவரி 02 ஆம் திகதிய கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை ஒவ்வொரு காலாண்டிலும் நடாத்த வேண்டிய போதும் மீளாய்வு ஆண்டில் பிரதேச சபையால் ஒரேயொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டது. . | 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து அனுப்பப்பட்ட கால அட்டவணையின்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என. | உரியவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (ஆ) பிரிவின் கீழ், தொழிற்சாலைகளின் கழிவுகளை வெளியேற்றுதல், சேர்த்துவைத்தல், காற்று வெளியேற்றுதல் மற்றும் அதிர்வு மற்றும் இறைச்சல் வெளியேற்றம் ஆகியவற்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவதுடன், மேலும் இந்த அனுமதிப்பத்திரங்கள் 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டியபோதிலும், 2023 இல் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலாவதியான 26 அனுமதிப்பத்திரதாரர்கள் அந்த அனுமதிப்பத்திரங்களை மீண்டும் பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டும். |